பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
06 08 2025 WEDNESDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

2. உத்ராகண்ட் கனமழை மற்றும் பெருவெள்ள பாதிப்புகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமியிடம் தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தார்.

3. வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதம் 5 புள்ளி ஐந்து சதவீதமாக தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

4. இந்தியா – ரஷ்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக விவாதிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் நாளை ரஷ்யா செல்கிறார்.

5. இந்தோனேஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

எதிர்க்கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மக்களவை இன்று காலை கூடியதும், 1945ஆம் ஆண்டு ஜப்பானில் ஹிரோஷிமா மற்றும் நாகசாஹி அணுகுண்டு தாக்குதலால் உயிரிழந்தவர்களுக்கு மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேசிய அவைத்தலைவர் திரு. ஓம் பிர்லா, உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில், அணுஆயுதங்களை ஒழிக்கும் நடவடிக்கைகளில் அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து, கேள்வி நேரத்தை நடத்த அவைத்தலைவர் முற்பட்டபோது, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று கோரி எதிக்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, நண்பகல் 12 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி தொடர்ந்ததால், பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்தி வைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று காலை கூடியபோது, காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

உத்தரபிரதேச மாநிலத்திலிருந்து மாநிலங்களவைக்கு அவர் இரண்டுமுறை தேர்வு செய்யப்பட்டதாக அவையின் துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் தெரிவித்தார்.

ஒரு சிறப்புமிக்க அரசியல்வாதி மற்றும் நாடாளுமன்ற வாதியை நாடு இழந்துவிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து, பல்வேறு காரணங்களை முன்வைத்து, 35 ஒத்திவைப்பு தீர்மானங்களை எதிர்க்கட்சிகள் அளித்ததாகவும், அவை அனைத்தும் நிராகரிக்கப்படுவதாகவும் திரு. ஹரிவன்ஸ் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதை அடுத்து அவை பிற்பகல் 2 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

உத்ராகண்ட் மாநிலம், உத்தரகாசியில் ஏற்பட்டுள்ள கனமழை மற்றும் பெருவெள்ள பாதிப்புகள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமியிடம் தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தார்.

உத்தரகாசியில் உள்ள தராளி பகுதியானது, இரண்டு முறை மேகவெடிப்பு காரணமாக ஏற்பட்ட பெருமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

அங்கு மேற்கொள்ளப்படும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து கலந்து ஆலோசித்த பிரதமர், பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்குமாறு அறிவுறுத்தியதாக திரு. புஷ்கர் சிங் தாமி, தமது சமூகவலைதள பதிவில் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை சீர் செய்வதற்கான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்யும் என்று பிரதமர் உறுதியளித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Kheerganga நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால், தராளியில் பாதிப்புக்குள்ளான மக்களை மீட்கும் பணியில் ராணுவம், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப் படையினர் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாகவும், நிவாரண முகாம்களில் உணவு, தண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வெள்ள பாதிப்புக்குள்ளான பகுதிகளில் முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி, இன்று ஹெலிகாப்டர் மூலமாக ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிலையில், இன்றும் உத்ராகண்டில் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

பெருமழை காரணமாக அங்குள்ள Alaknanda மற்றும் Dhauliganga நதிகளில் அதிக அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

வங்கிகளுக்கான ரெப்போ வட்டி விகிதம் 5 புள்ளி ஐந்து சதவீதமாக தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

மும்பையில் கடந்த 3 நாட்களாக நடைபெற்ற நிதிக்கொள்கை குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் குறித்து இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

வங்கி வட்டி விகிதம் 5 புள்ளி ஏழு ஐந்து சதவீதமாக இருக்கும் என்றும், நிலையான வைப்பு வசதி விகிதம் 5 புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

நடப்பு நிதியாண்டில், மொத்த உள்நாட்டு உற்பத்தி 6 புள்ளி ஐந்து சதவீதமாகவும், பணவீக்கம் 3 புள்ளி ஒரு சதவீதமாகவும் இருக்குமாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில், நாட்டின் வெளியுறவுக்கொள்கை செயல்பாட்டில் அவரது நிபுணத்துவம் என்றென்றும் நினைவுகூரப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>>><<<<<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி இயக்கம் நாடுமுழுவதும் நடைபெற்று வருகிறது.

சுதந்திர தினமான வரும் 15ஆம் தேதி வரை. இல்லங்கள். அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு வருகிறது.

மூவர்ண தேசியக்கொடியை வீடுகளில் ஏற்றி வைத்து, தேசிய ஒருமைப்பாட்டிற்கு வலுசேர்க்கும் வகையில் அதனை ஒரு இயக்கமாக நடத்த வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது.

சுதந்திரத்திற்கு பாடுபட்ட தியாகிகளை போற்றும் வகையில் தேசியக்கொடிகளுடன், விழிப்புணர்வு பதாகைகளையும் வாசகங்களையும் இளைஞர்கள் ஏந்தி பேரணியாக செல்லும் நிகழ்வுகள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.

>>>>>>><<<<<<<

ரயில்பெட்டிகள் மற்றும் எஞ்சின்களில் சிசிடிவி கேமராக்களை பொருத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தெரிவித்துள்ளது.

மக்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு பதிலளித்துள்ள ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், பயணிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்மூலமாக ரயில் பயணங்களில் குற்றச்செயல்கள் குறையும் என்றும் தெரிவித்துள்ளார்.

*சுமார் 75 ஆயிரம் ரயில் பெட்டிகளிலும், 15 ஆயிரம் ரயில் எஞ்சின்களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*இந்தியா – ரஷ்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பாக விவாதிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் நாளை ரஷ்யா செல்கிறார்.*

*ரஷ்யாவிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதியில் ஈடுபட்டு வருவதற்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், திரு. அஜித் தோவலின் இந்தப் பயணம் முக்கியத்துவம் பெறுகிறது.*

*>>>>>>><<<<<<<*

*எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, தமிழகத்தைச் சேர்ந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படையினர் இன்று காலை கைது செய்துள்ளனர்.*

*அவர்களிடமிருந்து 2 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.*

*புத்தலம் கடற்படை முகாமிற்கு அந்த மீனவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>>><<<<<<<*

*உலக தாய்ப்பால் வாரம் கடந்த 1ஆம் தேதி முதல் 7ஆம் தேதிவரை கடைபிடிக்கப்படுகிறது.*

*மத்திய – மாநில அரசுகளின் சார்பில் தாய்ப்பாலின் முக்கியத்துவம் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.*

*தமிழகத்தின், கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்ள தாய்ப்பால் வங்கி மூலமாக, பாதிப்புக்குள்ளான பச்சிளம் குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்கப்பட்டு வருவதாக மருத்துவர் செந்தில்குமார் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(வாய்ஸ் பைட் – மருத்துவர் 38 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசம், ஜம்மு காஷ்மீர், ஹரியானா, மேற்கு உத்தரபிரதேசத்தின் சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*கேரளாவின் ஒரு சில பகுதிகளில் இன்று அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.*

*அங்குள்ள கன்னூர் மற்றும் காசர்கோடு மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும், மலப்புரம், வயநாடு மற்றும் கோழிக்கோடு மாவட்டங்களுக்கு ஆரஞ்ச் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.*

*தமிழகம், மாஹே, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசத்தின் கடலோரப் பகுதிகள், தெலங்கானா, ராயலசீமாவின் ஒரு சில இடங்களில் வரும் 8ஆம் தேதிவரை கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தமிழகத்தின் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் இன்று கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்றும், தேனி, திண்டுக்கல், ஈரோடு. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.*

*>>>>>>><<<<<<<<*

*இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 6-2 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Lucky Kurniawan-ஐ வென்றார்.*

*மற்றொரு ஆட்டத்தில் அஜய் மாலிக்கும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<<*

*20 வயதுகுட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று போட்டி இன்று மியான்மரில் தொடங்குகிறது.*

*இந்தியா முதல் ஆட்டத்தில் இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.*

*யாங்கூனில் இப்போட்டி, மாலை 6 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>>>><<<<<<<<*

*சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.*

--------------

*துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில், நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் Army Red அணி, Nepal Army அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வென்றது.*

*>>>>>>>END<<<<<<<<*